**தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் சேலாப நிதியம் - 2019**

-----------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் சேலாப நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் நிதியத்தால் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் காசு அடிப்படைப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தமை | 2019 இன் இறுதி கணக்குகள் 2022 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டது. அதன் போது ஆவணங்கள் உரியவாறு பேணப்படாமை (மூல ஆவணங்கள்) காரணமாக, மோசடிகளின் காரணமாகவும் வேண்டுமென்றறே | நியமத்தின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. | பதிவேடுகள் மாற்றப்பட்டு பேணிச்செல்லல் போன்ற மோசடிகள் மேற்கொள்ளப்பட்ட காசோலைகள் மூலப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக அட்டுறு அடிப்படையில் கணக்குகளைத் தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த நிலுவை இலாப பங்குகளின் ரூபா 106,453 தொகை நிறுவனத்தின் ஊழியர் மற்றும் நிதியத்தின் அங்கத்தவர் அல்லாத நபர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் வங்கி உறுதிப்படுத்தல்களின் பிரகாரமும் அது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | இந்த ஊழியர்களின் அங்கத்துவ இலக்கம் 0881 இற்கும் சம்பள இலக்கம் 607 இற்கும் உரிய குறிப்புக்களில் W.G.B திசாநாயக்க ஆக இருந்த போதிலும் பங்களிப்பாளரை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அந்த காசோலை W.M.B.W.G பண்டார என்ற பெயரில் செலுத்தப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது . | நிதியத்தின் மூலம் குறித்துரைத்த நபர்களுக்கு குறித்த பணம் செலுத்தப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 76(இ) பந்திக்கு இணங்காத வகையில் 12 மாதங்களுக்கு குறைவான காலத்தின் போது முதிர்வடையும் ரூபா 554,328,418 நிலையான வைப்பு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டிற்கான நட்டத்திற்காகவும் பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | நிதியத்தில் காணப்படுகின்ற மொத்த முதலீடு கீழ் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இந்த முதலீடுகளில் பல்வேறு காலப் பகுதிகளில் காலாவதியாகின்றமையினால் அதன் கூட்டுத்தொகையாக நிலையான சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் வரிசை விடயங்கள் சரியாக காண்பிக்கப் படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை நிதியத்தின் கடன், முற்பணம் மற்றும் மானியம் செலுத்துதல்கள் கணக்குகளின் மூலம் ரூபா 46,134,961 தொகை மோசடி செய்யப்பட்டமையால், நிதியத்திற்காக போதியளவான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச்செல்லாமையின் காரணமாகவும் 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் அங்கத்துவர் நிதியம் மற்றும் அங்கத்தவர் கடன் கணக்கின் ஆரம்ப நிதி சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | 2012 - 2018 ஆம் ஆண்டில் இருந்து நிதியத்தில் முதல் செய்யப்பட்ட பணத்தின் கூட்டுமொத்தம் ரூபா 46,134,961 ஆக இருந்தது. | நிதியத்திற்காக போதியளவான சரியான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுரையாக பேணிச்செல்ல வேண்டி இருந்ததுடன் ஆரம்ப மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் நிதியத்தின் அங்கத்தவர் கடன் மீதி ரூபா 187,411,950 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்க்கப்பட்ட கடன் பட்டோர் பதிவேடு மற்றும் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அந்த மீதி ரூபா 174,616,519 ஆனமையால் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும், ஏடுகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 12,795,431 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த கடனை அறவிடுதல் பிரச்சினையுடனாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டின் போது சகல கடன் வழங்கல் மற்றும் கடன் அறவீடு சீராக்குமிடத்து 2019.12.31 இல் உள்ளவாறு கடன் மீதி ரூபா 187,411,950 ஆக கணிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 2019.12.31 இல் உள்ளவாறு சம்பள பதிவேடு மற்றும் கடன் பேரேட்டை பரீட்சித்து மீண்டும் அறவிடக்கூடிய உள்ளபடியான கடன் மீதி ரூபா 174,616,519 ஆக உள்ளது. | அங்கத்தவர் கடன் பதிவேட்டை சரியாகவும், நாளது வரையாகவும் பேணிச் செல்லல் மற்றும் பராமரித்துச் செல்வதற்கும், சகல கடன்களையும் கால ரீதியில் அறவிடுவதற்கும் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதியத்திற்காக செயற்பாட்டுக் கைநூல் தயாரிக்கப்படாதிருந்ததுடன் | தற்போது குறைபாடுகளைச் சரிசெய்து உரிய திட்ட முறைமை வகையில் | நிதியத்திற்காக செயற்பாட்டுக் கைநூல் தயாரித்து |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்காத வகையில் நிதியத்தின் கணக்கீடுகள் மற்றும் பதிவேடுகள் காணப்பட்டமை, பூர்த்தி செய்யப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட நலன்கள் மற்றும் கடன் பணம் பெறப்பட்டமைக்கான கையொப்பம் அல்லது பற்றுச்சீட்டு பெறப்படாமை, காசோலை பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை மற்றும் நிதியம் செயற்படுவதற்கு உள்ளக சுற்றறிக்கை தயாரிக்கப்படாமை போன்ற விடயங்களின் பிரகாரம் நிதியத்தின் நிதி முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடு நலிவான நிலையில் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தயாரிக்கப்பட்டுள்ளது. | அதன் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதியத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2021 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த பிரகாரம் நிதியத்தின் செயலாளராக செயற்பட்ட தெங்கு பயிர்ச் செய்கை சபையின் கணக்காளரால் நிதியத்தின் அங்கத்தவர் அல்லாத தமது குடும்பத்தின் அங்கத்தவர்களை உள்ளடக்கிய 13 பேர்களுக்கு கடன், பங்களிப்பு முற்பணம் மற்றும் ஓய்வூதிய நலன்களாக காசோலை மூலம் பணம் வழங்கியதன் மூலம் மோசடி செய்யப்பட்ட தொகை 2021 திசெம்பர் 31 வரையில் ரூபா 77,727,691 ஆக காணப்பட்டது. அதில் ரூபா 46,134,961 தொகை 2012 முதல் 2018 வரையான காலப் பகுதியில் இடம்பெற்றிருந்ததுடன் 2019 ஆம் | இந்த தொகை மோசடி செய்யப்பட்ட பணமாக அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் குழு அறிக்கை இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதன் சட்ட நடவடிக்கைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாமையினால் இந்தப் பணத்தை சட்ட ரீதியான நட்டமாக நிருவாக சபையினால் உறுதிப்படுத்தி கணக்குகளில் சீராக்குவதற்காக இனங்காணப்படவில்லை. | சபையின் ஊழியர்களின் சேமலாப நிதியம் சரியாகவும், முறையாகவும் நிருவகிக்க வேண்டி இருந்ததுடன் மோசடி தொடர்பாக சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டில் இடம்பெற்றிருந்த அவ்வாறான மோசடியான கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 12,894,143 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக இனங்காணப்பட்ட நட்டம் வருமான செலவினக் கணக்கில் சீராக்குவதற்கு பதிலாக நிதி நிலைமைக் கூற்றில் மோசடி செய்யப்பட்ட பணமாக அங்கத்தவர் நிதியத்தில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த மோசடி தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வெளிப்படுத்தப்பட்ட ரூபா 46,134,961 ஆன பண மோசடி தொடர்பாக எந்தவொரு சீராக்கமும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.5.3 நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 சனவரி 21 ஆந் திகதி நடைபெற்ற நிதியத்தின் பொதுச் சபை கூட்டத்தின் போது சகல அங்கத்தவர்களினதும் ஏற்றுக்கொண்டு பெறப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2022 சனவரி மாதம் முதல் அங்கத்தவர்களின் பங்களிப்பு பணம் மத்திய வங்கிக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக போதியளவான நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்ட போதும் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 மார்ச் மாதத்தின் போது மோசடி வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2022 சனவரி 21 ஆந் திகதி நடை பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அங்கத்தவர் பங்களிப்புப் பணம் 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் மத்திய வங்கிக்கு அனுப்பப் பட்டுள்ளது. | நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு நிச்சயமற்ற நிலைமையில் காணப்படுகின்றமை தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | மீளாய்வாண்டின் போது நிதியத்தின் மூலம் ரூபா 13,007,314 தொகை, ரூபா 1,830,884 மற்றும் ரூபா 1,500,000 தொகைகள் முறையே கடன், பங்களிப்பு முற்பணம் மற்றும் ஓய்வூதிய ஏற்பாடுகளுக்கான 13 உறுதிச்சீட்டுக்கள் மூலம் செலுத்தப்பட்டிருந்த போதும் அந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் கூட்டு மொத்தம் ரூபா 12,894,143 ஆன ஓய்வூதிய ஏற்பாடு மற்றும் பங்களிப்பு பணம் முற்பணம் செலுத்துதல் நிதி மோசடி தொடர்பான உறுதிச்சீட்டாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 16,338,198 | உறுதிச் சீட்டுக்கள் | இறுதிக் கணக்கின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட மொத்த முற்பண கொடுப்பனவுகள் ரூபா 14,390,000 தொகையில் அதாவது காசேட்டில் மோசடி செய்யப்பட்ட காசோலைகளை உள்ளடக்கி ரூபா 15,890,000 ஆகும். எனினும் உள்ளபடியான முற்பணத் தொகை ரூபா 14,390,000 ஆகும். அதன் காரணமாக ரூபா 1,500,000 தொகை காசேட்டின் பிரகாரம் மேலதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பிழையான காசோலைக்காக உரிய உறுதிச்சீட்டுகள் அந்த மோசடியாளரினால் கோவையில் இடப்படவில்லை. | நிதியத்தின் சகல கொடுப்பனவுகளுக்கும் உரிய உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் இறுதியில் காணப்பட்ட ரூபா 196,101,000 ஆன நிலையான வைப்புக்கள் தொடர்பான பதிவேடு ஒன்று நாளதுவரையாக பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காணப்பட்ட நிலையான வைப்பிற்காக மாதாந்த வங்கிக் கூற்று சார்ந்த பட்டோலைகள் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. இதனால் ஆண்டில் நிலையான வைப்பை அகற்றுதல், மீண்டும் முதலீடு செய்தல் மற்றும் முதலீட்டு வட்டி சதவீதம் போன்றவற்றின் சரியான தன்மை தொடர்பாக போதியளவான உறுதிப்படுத்தல் கணக்காய்வின் போது பெற முடியாதிருந்தது. | 196,101,000 | நாளதுவரையாக்கப்பட்ட நிலையான வைப்புப் பதிவேடு | சேமலாப நிதிய செயலாளரால் நிலையான வைப்பிற்காக பதிவேடொன்று பேணிச் செல்லப் பட்டிருந்த போதிலும் அது உரியவாறு கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பிடப்படாமை மற்றும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவும் இல்லை. அவ்வாறே 2019 ஆம் ஆண்டின் பின்னர் பதிவுகளும் இடப்பட்டிருக்க வில்லை. | நிலையான வைப்புப் பதிவேடு மற்றும் உரிய பட்டோலைகள் சரியான பிரகாரம் பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் நாளதுவரையாக்கப் பட்ட பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | 2019 ஆண்டிற்கான நிதியத்தில் ரூபா 56,292,647 மிகையொன்று காணப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் வருமான கணிப்பிடுதல் அல்லது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்த துடன் மீளாய்வாண்டின் போது கடந்த ஆண்டிற்குரியதாக செலுத்தப்பட்ட ரூபா 5,811,833 ஆன வருமான வரி தொடர்பாகவும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தவிர எந்தவொரு துணை ஆவணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | 5,811,833 | வருமான வரி செலுத்துவதற்கு துணை ஆவணங்கள் | 2018 ஆம் ஆண்டின் போது அட்டுறுவாக காணப்பட்ட வருமான வரி 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தி அதன் காசோலையை விடுவித்தல் மாத்திரம் இந்த ஆண்டின் போது மேற்கௌள்ளப்பட்டது. | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்கு உரிய துணை ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் இலக்கம் 82500659 என்ற இலங்கை வங்கி முதலீட்டு தொகுதிக்காக பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 11,016 ஆக இருந்த போதிலும் இந்த நடைமுறைக் கணக்கு தொடர்பாக காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் வங்கி கூற்றின் படி மீளாய்வாண்டின் இறுதியில் மீதி ரூபா 9,259 ஆக இருந்தது. | | வங்கி இணக்கக் கூற்று | இலங்கை வங்கி தலைமை அலுவலகத்தின் போது முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவத்திற்காக இரண்டு நடைமுறைக் கணக்குகள் திறக்கப்பட்டுள்ளது. அதில் காசோலை மூலம் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறவில்லை. ஆரம்ப வைப்பின் அடிப்படையில் இந்த மீதி காணப்படுவதுடன் முதலீட்டு தொகுதியில் பணம் மாத்திரம் இதன் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டுள்ளது. | நடைமுறைக் கணக்கு மற்றும் காசேட்டுக்குரிய மீதிகள் வங்கி இணக்கக் கூற்றின் மூலம் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க சேமலாப நிதியச் சட்டத்தின் 27(3) ஆம் பிரிவு மற்றும் 1973 மே | அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்தை நிருவகிக்கின்ற உறுப்புரை அல்லது கட்டளை ஆணையாளரின் கடிதத்தில் | 2019 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் இரண்டு தவணைகள் மாத்திரம் முற்பணம் | நிதியத்தின் உறுப்புரைக்கு இணங்க முற்பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| 02 ஆம் திகதிய தொழிலாளர் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட தெங்கு பயிர்ச் செய்கை சபையின் சேமலாப நிதியத்தின் உறுப்புரையில் 6 (II) ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்படுமிடத்து தவிர ஏனைய மாற்ற முடியாதிருந்ததுடன் நிதியத்தின் நிருவாகம் தொடர்பாக, கட்டளை விதிக்கப்படாமை எந்தவொரு விடயம் அல்லது சம்பவம் தொடர்பாகவும் ஏற்பட்ட சகல விடயங்களையும் எடுத்து கட்டுப்பாட்டு சபையின் அதிகமானோரின் தீர்மானம், தொழில் ஆணையாளரினதும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரினதும் மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் அதன் பிரகாரம் செயற் படுதல் வேண்டும். எனினும் 2008 யூன் 19 ஆந் திகதி நடைபெற்ற கட்டுப்பாட்டு நிர்வாக செயற்குழு கூட்டத்தினால் அங்கத்தவர்களின் வயது 55 ஐ பூர்த்தி செய்த பின்னர் ஒரு தடவையும் அதற்கு 2½ வருடங்களுக்குப் பின்னர் அதாவது 57½ வருடங்கள் பூர்த்தி செய்யுமிடத்து மீண்டும் ஒரு தடவையுமாக இரண்டு சந்தர்ப்பங்களின் போது முற்பணம் செலுத்துவதற்கு தீர்மானிப்பதற்காக தொழில் ஆணையாளரினதும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரினதும் மேவுகை அங்கீகாரம் பெற்றுக்கொண்டதன் பின்னர் மற்றும் மேவுகை பெற்றுக்கொள்ளாமல் உறுப்புரையைத் திருத்துதல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 19 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 15,890,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | வழங்குதல் வேண்டும். கோரப்பட்டிருந்த போதும் தற்போது நிதியத்திலிருந்து இரண்டு தவணைகளை விட முற்பணம் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) 1973 மே 02 ஆம் திகதி தொழிலாளர் திணைக்களம் அங்கீகரித்த தெங்கு பயிர்ச் செய்கை சபையின் சேமலாப நிதிய பிரமாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 5 ஆம் பிரிவு | நிதியம் தொடர்பாக செயற்படுகின்ற மூவரை உடைய நிர்வாக செயற்குழு கூட்டத்தினால் நிருவகிக்கப்பட வேண்டியிருந்ததுடன் நிர்வாக செயற்குழு கூட்டத்திற்காக இரண்டு பேர் இருத்தல் வேண்டும். எனினும் 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை இந்த நிருவாக செயற்குழு கூட்டம் நடை பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அந்த ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ஓய்வூதிய மானியக் கடன் மற்றும் முற்பணத்திற்காக நிருவாக செயற்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நிர்வாக செயற்குழு கூட்டத்தின் அறிக்கைகளில் குறிப்பிடப்படாதிருந்த போதும் ஒவ்வொரு காசோலை விநியோகிக்கும் போது நிருவாக செயற்குழு அங்கத்தவர்கள் இருவருக்கும் உரிய காசோலையில் கையொப்பம் இட்டுள்ளனர். எனினும் தற்போது ஒவ்வொரு கொடுப்பனவுகளும் நிருவாக செயற்குழு கூட்டத்தின் உரிய குறிப்புக்கள் இட்டு பணம் விடுவிக்கப்படுகின்றது. | கூட்டங்களை நடாத்துதல் மற்றும் ஓய்வூதிய மானியக் கடன் மற்றும் முற்பணம் செலுத்துதல் நிதியத்தின் பிரமாணங்களுக்கு இணங்க மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் கூட்ட அறிக்கை முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ii) | 28 ஆம் பிரிவு | ஒவ்வொரு கலண்டர் ஆண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டிய நிதியத்தின் கணக்குகள், தொழில் ஆணையாளரினால் அங்கீரிக்கப்படுகின்ற கணக்காய்வாளரால் ஒவ்வொரு பன்னிரெண்டு மாதங்களுக்கும் ஒரு தடவை வீதம் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். எனினும் 2018 ஆம் ஆண்டு வரை நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தை நியமிப்பதற்காக தொழில் ஆணையாளரிடம் இருந்து பெறப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு | நிதியத்தில் தற்போது நடவடிக்கை எடுக்கின்ற நிருவாக செயற்குழுவினால் முன்னர் இருந்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முன்னர் கடமை நடவடிக்கைகளை மேற்கொண்ட செயலாளரை உள்ளடக்கிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் தடுப்புச் சிறைகளில் இடப்பட்டுள்ளனர். அந்த பதிவேடுகள் | தொடர்புடைய சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நிதியத்தின் கணக்குகள் தொழில் ஆணையாளரின் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளரை வரவழைத்து கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்படவில்லை. | எதனையும் கண்டறிவதற்கு முடியாதுள்ளது. | |
| (iii) | 29 ஆம் பிரிவு | செயற்குழுவினால் ஒவ்வொரு கலண்டர் ஆண்டின் போதும் ஒரு தடவை அங்கத்தவர்களின் கூட்டப்பட வேண்டியிருந்த போதிலும் நிதியத்தால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக அங்கத்தவர்கள் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | முன்னாள் இருந்த நிருவாக செயற்குழுவினால் இறுதித் தடவையாக அங்கத்தவர்களின் கூட்டம் 2019 நவம்பர் மாதத்தின் போதே நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் கோரல் கடிதம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மோசடிகளைத் விடுவித்ததன் பின்னர் தற்போதைய நிருவாக செயற்குழுவினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக பொது சபைக் கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் பிரமணங்களுக்கு இணங்க அத்தவர் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 56,292,647 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 54,955,892 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,336,755 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமான வரி ஒதுக்கீடுகள் கணக்கீடு செய்யப்படாமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோசடி தொடர்பான நிறுவனத்தின் 05 ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்து சேவையிலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான சட்டரீதியான | தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் வழக்குத் தொடர்வதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | மோசடி தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் விரைவாக எடுக்க வேண்டியிருந்ததுடன் |

நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2021 ஏப்ரல் 19, 2021 மே 12, 2021 யூன் 07, 2021 நவம்பர் 11, 2021 திசம்பர் 08, 2022 சனவரி 27, 2023 மே 24 ஆந் திகதிகள் ஆக 07 சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழக்கை கையளிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக அறிவித்து கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முதலாவது பதிலளித்தல் 2023 யூன் 26 ஆந் திகதி இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2023 ஆகஸ்ட் மாதத்தின் போது கடுவெல மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்புடைய 06 உத்தியோகத்தர்களுக்கு எதிராக தொடரப்பட்டிருந்த 06 வழக்குகளும் மீண்டும் கோவையிடும் அடிப்படையில் சட்டமா அதிபர்கள் திணைக்களத்தின் வாய் மூல ஆலோசனையின் படி ஆகற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மோசடியால் நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்த்துக் கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியுடன் உரிய நபர்களுக்கு எதிராக சிவில் வழக்கு தொடர வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 வரை அவ்வாறான வழக்குகள் தொடரப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் மோசடி ஏற்பட்ட காலமான 2012 முதல் 2021 வரை நிதியத்தில் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக காசோலைகளில் இரண்டாவது கையொப்பம் இட்ட நிதியத்தின் தலைவர் ஏழு பேர் மற்றும் பதில் கடமை மற்றும் இரட்டை அடிப்படையில் நியமிக்கப்பட்ட 07 பொது முகாமையாளர்கள்

மோசடி செய்யப்பட்ட பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக எந்தவொரு சட்ட ரீதியான நடவடிக்கைகளும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் மோசடிகள் ஆரம்பமாக மோசடிகள் இணங்காணப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்து 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அவர்களுக்கு எதிராக குற்ற வழக்கு தொடரப்பட்டிருக்கவில்லை. | சபையினால் இந்த சம்பவம் தொடர்பாக 2021.09.24 ஆந் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களால் ‘‘பீ அறிக்கை ஒன்றின் மூலம் கடுவெல நீதிவான் நீதி மன்றத்திற்கு விடயங்கள் அறிக்கையிடப்பட்டு விசாரணை நடாத்தப்படுகின்றது. 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மோசடிகள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டி இருந்ததுடன் மோசடி செய்யப்பட்ட பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது நிதியத்தின் ஊழியருக்கு ரூபா 263,860 ஏற்பாடு செலுத்தும் போது அந்த ஊழியரின் பெயரில் காசோலை விநியோகிக்கப்படாமல் காசோலை மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த கொடுப்பனவுகள் தொடர்பான பெறுநரை உறுதிப்படுத்துவதற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அதில் பெறுநர் குறிப்பிடப்படாமல் பிணையாளிக்கு வழங்கப்பட்டிருந்தது. | குறுக்கு கோடிட்ட காசோலை மூலம் அங்கத்தவர் மானியம் பாதுகாப்பாக செலுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | நிதியத்தின் நிதி மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வேலை கையளித்தல் மற்றும் வேலை பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நிருவாக செயற்குழுவின் அங்கத்தவர்களி னால் ஊழியர் சேமலாப நிதியத்தின் காசோலைகளில் கையொப்பமிடல் மற்றும் நிதியத்தின் செயலாளராக செயற்பட்ட நிதி மோசடிக்கு நேரடியாக தொடர்புடைய | தற்போது குறைபாடுகள் சரிசெய்து உரிய முறைமையொன்று முறையான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நிருவாக முறைமைப்படுத்துவத ன் மூலம் உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையின் கணக்காளரால் நிதியத்தின் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கு உரிய உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (உ) | நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டு வரை தனியார் கணக்காய்வு நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 இன் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முறைப்படியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது. 2022 மார்ச் 26 ஆந் திகதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக இடையூறு இன்றி இருந்ததாக சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட தெளிவுபடுத்தலின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 2019 ஆம் ஆண்டு முதல் நிதியத்தின் கணக்காய்வுகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தனியார் கணக்காய்வு செய்த நிறுவனம் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மூலப் பதிவேடுகள் விரிவாக பரிசோதனை செய்யப் படாமல் தெரிவுப் பரிசோதனை மாத்திரம் பரிசோதனைக்கு உட்படுத்தி கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது. அதனால் மோசடி மற்றும் ஊழல் தொடர்பாக எந்தவொரு வெளிப்படுத்தலும் இந்தக் கணக்காய்வின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. | பிழைகள் மற்றும் மோசடிகளை தவிர்த்துக் கொள்ளல் நிருவாகத்தின் பொறுப்பாக இருந்தமையால் வெற்றிகரமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை அறிமுகப் படுத்துவதற்கும் அமுல்படுத்துவதற்கும் நிருவாகத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இந்த மேலாப நிதியத்தில் இருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 56 சந்தர்ப்பங்களின் போது மோசடியாக நிதியத்தின் செயலாளரின் பெயருக்கு ரூபா 15,083,260 ஆன 10 காசோலைகளும், செயலாளரின் தாயின் பெயருக்கு ரூபா 6,015,740 ஆன 05 காசோலைகளும், செயலாளரின் சகோதரிகள் இருவரின் பெயருக்கு ரூபா 6,120,259 ஆன 05 காசோலைகளும், செயலாளரின் தந்தையின் பெயருக்கு ரூபா 3,452,350 ஆன 02 காசோலைகளும், செயலாளரின் ஏனைய உறவினர்களின் பெயர்களுக்கு ரூபா 3,535,864 ஆன 05 காசோலைகளும் செயலாளரால் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மோசடிகள் தொடர்பான பதவியணியினர் சம்பந்தமாக சரியான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மோசடி செய்யப்பட்ட சகல பணத்தையும் மீண்டும் அறவிடுவதற்கான முறைமையொன்று தயாரித்தல் வேண்டும். |

கொள்வனவு செய்யப்பட்ட காணி உரிமையாளருக்கு ரூபா 1,960,000 ஆன காசோலையும் எழுதப்பட்டிருந்ததுடன் விடயப் பொறுப்பு மற்றும் அவரின் கணவரின் பெயருக்கு ரூபா 40,507,760 ஆன 26 காசோலைகளும் முகாமைத்துவ உதவியாளருக்கும், தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் எழுதப்பட்ட ரூபா 500,000 மற்றும் ரூபா 552,457 வீதம் 02 காசோலகளையும் உள்ளடக்கி ரூபா 77,727,691 ஆன ஓய்வூதிய மானியம், கடன் மற்றும் பங்களிப்பு முற்பணம் ஆக மோசடியாக அகற்றப்பட்டிருந்தமை தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்ச் செய்கை மேம்படுத்தல் மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு செயலாளரால் நியமிக்கப்பட்ட விஷேட புலனாய்வு குழுவினாலும், உள்ளக புலனாய்வு குழுவினாலும் 2021 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 08 ஆம் திகதி வரை மோசடி செய்யப்பட்ட தொகையில் ரூபா 15,898,523 மீள அறவிடப்பட்டிருந்தது.